பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

04 09 2025 THURSDAY 6 45 AM

<u>வணக்கம்-மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சரக்கு மற்றும் சேவை வரி 5 மற்றும் 18 என்ற இரண்டு அடுக்கு வரி விகிதங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- பல்வேறு பொருட்கள் மீதான வரி குறைப்பு மூலம், அனைத்து தரப்பினரும் பயனடைவார்கள் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.
- பொருட்கள் மீதான சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு இம்மாதம் 22ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் திமுக ஆட்சி அமைந்த பிறகே, போதைப்பொருள் விற்பனை அதிகரித்துள்ளது என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.
- அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி - நியூஸிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>>><<<<<<<<<

பல்வேறு பொருட்கள் மீதான சரக்கு மற்றும் சேவை வரியை மத்திய அரசு குறைத்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக்கூட்டத்திற்குப் பின், செய்தியாளர்களிடம் பேசிய மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், சரக்கு மற்றும் சேவை வரி 5 மற்றும் 18 என்ற இரண்டு அடுக்கு வரி விகிதங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

சாதாரண மற்றும் நடுத்தர மக்கள் பயன்படுத்தும் பொருட்கள் மீதான வரி, முன்னதாக விதிக்கப்பட்ட 18 மற்றும் 12 சதவீதத்திலிருந்து தற்போது 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சப்பாத்தி உள்ளிட்ட அனைத்து வகை இந்திய ரொட்டிகள், கொண்டைக்கடலை, பன்னீர் உள்ளிட்டவற்றிற்கு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது என்று திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்.

மருத்துவ காப்பீட்டுத் திட்டங்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

குளிர்சாதன இயந்திரங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், சிறியவகை கார்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் மீதான வரி 28 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

அனைத்து வேளாண் உபகரணங்கள் மீதான வரி, 12 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் விவசாயிகள் பயனடைவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

சாக்லெட், காபி, வெண்ணெய், நெய் உள்ளிட்ட பொருட்கள் மீதான சரக்கு மற்றும் சேவை வரி 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

வாகன உதிரி பாகங்கள், மூன்று சக்கர வாகனங்கள் ஆகியவற்றின் மீதான வரி, 28 சதவீதத்திற்கு பதிலாக இனி 18 சதவீதமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த வரி விகிதங்கள் இம்மாதம் 22ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, எதிர்கால தலைமுறையினருக்கான வரி சீர்திருத்தங்களை நிர்ணயித்துள்ளதாகவும், அதன் பயன்களை மக்கள் விரைவில் பெறுவதை உறுதி செய்துள்ளதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்.

>>>>>>>><<<<<<<<<

சரக்கு மற்றும் சேவை வரியில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதற்கு தலைவர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்கள் குறைப்பு மூலம், சாதாரண மக்கள், விவசாயிகள், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் துறையினர், நடுத்தர வகுப்பினர், பெண்கள் மற்றும் இளைஞர்கள் ஆகியோர் பயனடைவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் எளிதான வாழ்க்கையை கருத்தில் கொண்டு, வரி சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சீர்திருத்தங்கள், எளிதாக வணிகம் செய்வதற்கு உதவிடும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு, ஏழை மற்றும் நடுத்தர வகுப்பினருக்கு பெரும் நிவாரணம் அளிக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள அவர், வரிமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளதால். சாதாரண குடிமக்களின் சுமை குறையும் என்று கூறியுள்ளார்.

இந்த சீர்திருத்தங்கள், எளிதான வாழ்க்கையை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல், எளிதாக வர்த்தகம் புரிவதற்கு பெரும் ஊக்கமளிக்கும் என்று திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், முன்னதாக சரக்கு மற்றும் சேவை வரி 4 விகிதங்களில் இருந்த நிலையில், தற்போது 5 மற்றும் 18 சதவீதம் என்று இரண்டு விகிதங்களாக குறைக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

சுதந்திர தின உரையின் போது பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டது போல், இது மக்களுக்கான சிறந்த தீபாவளிப் பரிசாக அமைந்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

கல்வி, வேளாண்மை, மருத்துவம், அடிப்படை தேவைகள் என்று அனைத்து வகையிலும் நாட்டு மக்களின் நலன் அறிந்து வரி சீர்திருத்தத்தை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாகவும், இதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமனுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஏழை எளிய மக்கள், நடுத்தர வகுப்பினர், விவசாயிகள், பெண்கள், சிறு குறு வணிகர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பயனடையும் வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க வரிக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலம் அனைத்து தரப்பினரும் பயனடைவார்கள் என்று பிஜேபி தேசிய மகளிர் அணித் தலைவர் திருமதி. வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இந்த நடவடிக்கை மூலம், விவசாயிகள், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறையினர், சுயஉதவி குழுவினர் மற்றும் பெண்கள் பயனடைவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. ப.சிதம்பரம் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தம் வரவேற்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

எனினும் இது 8 ஆண்டுகால தாமதமான நடவடிக்கை என்றும் திரு. ப. சிதம்பரம் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>>><<<<<<<<<

தமிழகத்தில் திமுக ஆட்சி அமைந்த பிறகே, போதைப்பொருள் விற்பனை அதிகரித்துள்ளது என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.

மதுரையில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாக கூறினார்.

மதுரை மாநகராட்சியில் நடைபெற்றதாக கூறப்படும் ஊழல் குறித்து முறையாக விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்றும், அஇஅதிமுக ஆட்சி அமைந்தால் இதுதொடர்பாக உரிய விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<<

இருவரிச் செய்திகள்

காஸா நகரை கைப்பற்றுவதற்காக 40 ஆயிரம் ராணுவ வீரர்களை இஸ்ரேல் தயார் நிலையில் வைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

>>>>>>>><<<<<<<<<

யுக்ரைன் பிரதமர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி மாஸ்கோ வந்தால், அவரை சந்தித்துப் பேச தயாராக இருப்பதாக ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டின் கூறியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<<

மத்திய புவி அறிவியல் அமைச்சகம் மற்றும் இந்திய வானிலைத் துறை செயல்பாடுகள் குறித்து அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் நேற்று ஆய்வு செய்தார்.

>>>>>>>><<<<<<<<<

பஞ்சாபில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் இன்று பார்வையிடவுள்ளார்.

>>>>>>>><<<<<<<<<

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ், ஸ்ரீவில்லிப்புத்தூர் ரயில்நிலையத்தில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகளை மதுரை ரயில்வே கோட்ட மேலாளர் திரு. ஓம்பிரகாஷ் மீனா பார்வையிட்டார்.

>>>>>>>><<<<<<<<<

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் சாலை ஆய்வாளர் பணிக்கு தேர்வு செய்யப்பட்ட 41 பேருக்கு பணிநியமன ஆணைகளை மாநில அமைச்சர் திரு. எ.வ.வேலு திருவண்ணாமலையில் வழங்கினார்.

>>>>>>>><<<<<<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆட்சியர் திரு. பிரதாப் தலைமையில் நடைபெற்றது.

>>>>>>>><<<<<<<<<

மழை வெள்ளத்தின் போது மக்களை பாதுகாப்பது, மீட்பது குறித்த ஒத்திகை நிகழ்ச்சி, கன்னியாகுமரி மாவட்டம் பழையாற்றில் மாவட்ட தீயணைப்புத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெற்றது.

>>>>>>>><<<<<<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் அருகே கருவில் உள்ள பாலினத்தை கண்டறிந்து கூறிய ஒருவர் கைது செய்யப்பட்டார்.

>>>>>>>><<<<<<<<<

ஓணம் பண்டிகையை ஒட்டி, தெற்கு ரயில்வே சென்னை பிரிவின் பயணச்சீட்டு முன்பதிவு அலுவலகம் நாளை காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை மட்டுமே செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<<

*விளையாட்டுச் செய்திகள்*

*அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி - நியூஸிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 6-7, 6-3 என்ற செட்கணக்கில் குரேஷியாவின் Nikola Mektic – அமெரிக்காவின் Rajiv Ram இணையை வென்றது.*

>>>>>>>><<<<<<<<<

*சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சித்தாந்த் பாந்தியா – ராம்குமார் ராமநாதன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 7-5, 2-6, 12-10 என்ற செட்கணக்கில் சீனாவின் Aoran Wang – Yizhou இணையை வென்றது.*

>>>>>>>><<<<<<<<<

*ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியின் சூப்பர்-4 சுற்றில் இந்தியா – கொரியா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.*

*பீகாரின் ராஜ்கிரில் நடைபெற்று வரும் இப்போட்டியில், கொரியா 2-1 என்ற கோல்கணக்கில் முன்னிலை வகித்திருந்த நிலையில், இந்திய வீரர் மன்தீப் சிங் கோல் அடித்து ஆட்டத்தை டிரா செய்தார்.*

*இந்தியா தமது அடுத்த போட்டியில் இன்று மலேசியாவை எதிர்கொள்கிறது.*

>>>>>>>><<<<<<<<<

*23 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து தகுதிச் சுற்று ஆட்டத்தில், இந்தியா 2-0 என்ற கோல்கணக்கில் பஹ்ரைனை வென்றது.*

*தஜிகிஸ்தானில் நடைபெற்று வரும் CAFA கோப்பை கால்பந்துப் போட்டியில், இந்தியா இன்று ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.*

>>>>>>>><<<<<<<<<

*உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டி, இங்கிலாந்தின் Liverpool-ல் இன்று தொடங்குகிறது.*

*இந்தியாவின் சார்பில் நிக்கத் ஜரீன், லவ்லினா போர்கோகைன், பூஜா ராணி, சச்சின் சிவாச், ஹர்ஷ் சௌத்ரி உள்ளிட்ட 20 வீரர்கள் பங்கேற்கின்றனர்.*

**>>>>>>>><<<<<<<<<**